செ.வெ.எண்: 553/2019 நாள்: 07.11.2019

**செங்குணம் கிராமத்தில் வண்ண கிரானைட் குவாரிக்கு சுற்றுச்சூழல் அனுமதி பெறுவதற்கான பொதுமக்கள் கருத்து கேட்புக் கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் நடைபெற்றது...**

திருவண்ணாமலை மாவட்டம், போளூர் வட்டம், செங்குணம் கிராமத்தில், வண்ண கிரானைட் குவாரிக்கு சுற்றுச்சூழல் அனுமதி பெறுவதற்கான பொதுமக்கள் கருத்து கேட்புக் கூட்டம் இன்று (07.11.2019) போளூர், ஆர்.குண்ணத்தூர் கூட்ரோடு, எஸ்.எம்.எஸ். திருமண மண்டபத்தில், மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. க. சு. கந்தசாமி, இ.ஆ.ப. அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில், சென்னை தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் (TAMIN) துணை மேலாளர்கள் திரு. ஈ. கணேசன் (சுரங்கம்), திரு. கே. விஜயகுமார் (சுற்றுச்சூழல்), விழுப்புரம் கோட்ட மேலாளர் திரு. கே. சக்திவேல், மாவட்ட சுற்றுச்சூழல் உதவிப் பொறியாளர் திருமதி. சுஹாஷினி, அரசு அலுவலர்கள், சமூக ஆர்வலர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின், தமிழ்நாடு கனிம நிறுவனம் (விழுப்புரம் கோட்டம்), திருவண்ணாமலை மாவட்டம், போளூர் வட்டம், செங்குணம் கிராமம், புல எண். 55A/1B1 (பகுதி)-ல் 22.88.5 ஹெக்டர் பரப்பளவுள்ள அரசு புறம்போக்கு இடத்தில் அமைந்துள்ள வண்ண கிரானைட் குவாரிக்கு சுற்றுச்சூழல் அனுமதி பெறுவதற்கான பொதுமக்கள் கருத்துக் கோட்புக் கூட்டம் மாவட்ட ஆட்சியர் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டம் முடிந்தவுடன் மாவட்ட ஆட்சியர் அவர்கள் செங்குணம் கிராமத்தில் வண்ண கிரானைட் குவாரிக்கான இடத்தினை நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவண்ணாமலை மாவட்டம்.**